# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | **:-** | **O.S.No. 193/2015** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | **:-** | **வா.சா-01 (PW-01 )** |
| **பெயர்** | **:-** | **பெரியசாமி** |
| **தேதி** | **:-** | **01-07-2025** |

**சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :-**

நான் மொத்தம் 6 சொத்துக்களுக்கு வழக்கு போட்டுள்ளேன். வா.சா.ஆ-22, வா.சாஆ-23 ஆகிய ஆவணங்களில் மொத்தம் 3 இன சொத்துக்கள்தான் உள்ளன என்றால் சரிதான். மேற்சொன்ன இரு ஆவணங்களும் 2009 ஆம் ஆண்டு சம்மந்தப்பட்டவை என்றால் சரிதான். இந்த வழக்கு 2015 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 2015, 2016 ஆம் ஆண்டு சம்மந்தப்பட்ட வருவாய்துறை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

என்னுடைய தகப்பனார் பெரம்பாகவுண்டர் 1997 ஆம் ஆண்டு இறந்தார் என்றால் சரிதான். 1997 ஆம் ஆண்டே பாகப்பிரிவினை கோரும் உரிமை வந்துவிட்டது என்றால் சரிதான். 1031/2007 என்ற பாகப்பிரிவினை வழக்கை 10 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 07.10.2010 ஆம் தேதியன்று அந்த வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கு தள்ளுபடி

ஆனது குறித்து வழக்குரைஞரிடம் கேட்டேன். அவர் அந்த வழக்கை மீண்டும் கோப்பில் எடுக்க நடவடிக்கை எடுப்பதாக சொன்னார். காலதாமதம் ஆகிவிட்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்தோம். 1984 ஆம் ஆண்டே வழக்குச் சொத்துக்கள் நீதிமன்ற ஏலத்தில் விடப்பட்டு விட்டன என்றும் அதிலிருந்தே வழக்குச் சொத்தின்மீது எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 8 ஆம் பிரதிவாதியான மருத்துவரிடம் அநியாய லாபம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு பல குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் நான் கோரியுள்ள பரிகாரம் எதுவும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

முந்தைய வழக்கை நடத்திய வழக்குரைஞர் இறந்துவிட்டார்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு தாக்கல் செய்யப்படும்வரை முந்தைய வழக்கை நடத்திய வழக்குரைஞர் இருந்தார் என்றால் சரிதான்.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.